1974 சனவரி 28]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கடலாடி ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்டவரை மட்டும் ஆசிரியர்களுக்கு 1973 ஜூலை ஆகஸ்டு மாதங்களின் ஊதியம் நிதி பற்றுக்குறை காரணமாக, 22—9—1973-ல் வழங்கப்பட்டது. மற்ற மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலும், ஜூலை மாதத்திய ஊதியம் குறித்த தேதியில், அதாவது 1—8—1973-லும் வழங்கப்பட்டது.

Gratuity scheme for labourers

* 205 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any scheme under consideration to provide for the payment of gratuity to the Industrial Labour; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) — (இ) : 1972-ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 39/1972) படி தொழிற்சாலைகள், சுரங்கங்கள், எண்ணெய் வயல்கள், மலைத் தோட்டங்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதை நிறுவனங்கள், கடைகள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு 15 நாட்கள் ஊதிய வீதம் கணக்கிடப்பட்டு பணிக்கொடை வழங்கப்படும். இந்தச் சட்டம் 16—9—1972 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சட்டம் ஓட்டலிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் கட்டிடத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் இன்னும் சின்கோனு பிளான்டேஷன் தொழிலாளிகளுக்கும் அமுலில் இல்லையே, அவர்களையும் இச்சட்டத்தில் சேர்க்கக்கூடிய அளவில் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய வரம்பை விஸ்தரிக்கின்ற தன்மையில் பீடித் தொழிலாளர்களுக்கும் கேட்டரிங் தொழிலாளர்களுக்கும் மோட்டார் தொழிலாளர்களுக்கும் விஸ்தரிக்கலாமா என்பதைப் பற்றி மத்திய அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு வருஷ சர்வீசுக்கும் 15 நாள் கிராச்சுவிட்டி கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இன்றைக்குப் பல முதலாளிகள், 15 நாட்கள் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக 13 நாள் என்று கொடுக்கிறார்கள் ; ஆகவே, 13 நாள் அல்ல, 15 நாள் கொடுக்க வேண்டுமென்று அரசு அம்முதலாளிகளுக்கு சுற்றறிக்கை விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள இந்தச் சட்டத்தின்படி, 15 நாள் தந்தாக வேண்டும். அப்படிக் கொடுக்காமல், யாராவது தவறு செய்வாரானால், அது அரசு கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அதற்காகத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த வருஷத்திற்கு 15 நாள் என்பது கடைசி வரையிலும் அவர்கள் எவ்வளவு வருஷங்கள் சர்வீஸ் செய்திருர்களோ, அதுவரையிலும் அளிக்கப்படுமா அல்லது ஏதாவது " சீலிங் ", இவ்வளவுக்கு மேல் இல்லையென்று சட்டத்திலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இந்த பணிக்கொடை அளிக்கப்படுகின்ற பல ஸ்தாபனங்களிலே ஓய்வு பெற்ற உடனே, பணிக்கொடை அளிக்கப்படுவதில்லையென்று மின்சார வாரியம் போன்ற இடங்களிலிருந்தெல்லாம் புகார் வருகிறது. அவைகளை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, உடனுக்குடன் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இவைகளை அரசு கவனத்திலே கொண்டு ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Rural Housing Project

* 206 *Q*.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to invest rupees one crore in each district in this State on rural housing projects; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, மாவட்டங்களுடைய நிலைமைகளை உத்தேசித்து, மாவட்ட வாரியாகவாவது, மறு பரிசீலனை செய்து ரூ. 1 கோடி என்பதை இன்னும் குறைத்தாவது அரசு அமுல் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் இதுவரையிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 27 லட்சம் செலவு செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் விளைவாக, 332 கிராமங்களிலே, ரூ. 77 லட்சத்துக்கு வீடுகள் கட்டுவதற்குத் தற்போது கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதை 1,150 கிராமங்களுக்கு விஸ்தரிக்க வேண்டிய அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.